

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா – கழக அரசின் நான்காண்டு கால சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உத்திரமேரூர் ஒன்றியம் மருதம் ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர், கெ.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் திருவாரூர் த.ஜெயராமன், சிறுவேடல் க.செல்வம் எம்.பி., டி.குமார், என்.எஸ். பாரிவள்ளல், சசிகுமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.

குருந்தன்கோடு ஊராட்சிக்குட்பட்ட, சைமன் ஊராட்சி

# மகளிர் சுய உதவிக் குழுவினரின் மீன் உற்பத்தி பொருட்கள்!

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு!

கன்னியாகுமரி, மே.11-

கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், குருந்தன்கோடு வட்டாரத்திற்குட்பட்ட, சைமன் ஊராட்சி மகளிர் சுய உதவி குழுவினரின் மீன் உற்பத்தி பொருட்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்-

குருந்தன்கோடு வட்டாரத்திற்குட்பட்ட சைமன் ஊராட்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை சார்ந்த சுய உதவி குழு உறுப்பினர்கள் மேற்கொண்டு வரும் மீன் மதிப்பு கூட்டுதல் பொருட்களான மீன் ஊறுகாய், மீன் கட்லெட், மீன் பக்கோடா, கருவாடு, கருவாட்டுப் பொடி போன்ற வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் அலை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்டு வரும் பல்வேறு விதமான மூலிகை குளியல் சோப்பு மற்றும் ஷாம்பு போன்ற உற்பத்தி பொருட்கள் நேரடியாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் செயல்பட்டு வரும் சுய உதவி குழு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை விபரம், வாழ்வாதார செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் உறுப்பினர்களின் விபரம், தினசரி உற்பத்தி திறன், சந்தைப்படுத்துதல் மற்றும் இலாப விபரங்கள் குறித்து கேட்டறியப்பட்டது. இத்தொழில்கள்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை திறன் மற்றும் சந்தைப்படுத்தும் திறனை மேலும் அதிகரித்திடும் விதமாக பேக்கேஜிங், பிராண்டிங் மற்றும் இணையதள விற்பனையில் அதிக கவனம் செலுத்திட வேண்டுமென சுய உதவிக் குழுவினரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

சுய உதவிக்குழுவினர் மேற்கொண்டுவரும் இத்தொழில்களை அதிக அளவில் விரிவாக்கம் செய்து அதிக அளவிலான உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தேவையான தொழில் கூடம் அமைத்தல், UNDP திட்டத்தின் கீழ் உறுப்பினர்களை பயன்பெறச் செய்தல்,

பேக்கேஜிங் மற்றும் உற்பத்திக்கு தேவையான பொருட்களை மாவட்ட அளவில் மொத்த கொள்முதல் மேற்கொண்டு உறுப்பினர்களுக்கு வழங்கிட திட்ட இயக்குனர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நடைபெற்ற ஆய்வின் போது மகளிர் திட்ட இயக்குநர் திரு.பத்ஹூ முகம்மது நசீர், உதவி திட்ட அலுவலர்கள், சுயஉதவிக்குழு வினர், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

ஆயுதப்படை மைதானத்தில்

# தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்துப் பள்ளிகளின் வாகனங்கள் ஆய்வு!

## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பா.பிரியா தலைமையில்!

தஞ்சாவூர், மே.11-

தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் வாகனங்கள் ஆய்வுப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நேற்று (10.05.2025) நடைபெற்றது.

தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற ஆய்வில் 452 பள்ளி வாகனங்களும், பட்டுக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 334 வாகனங்களும், கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் 225 வாகனங்களும் ஆக மொத்தம் 1011 பள்ளி வாகனங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

குறைபாடுகள் உள்ள வாகனங்கள் குறைகளை சரி செய்து மீண்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். பள்ளி வாகனங்கள் தகுதிச் சான்று பெற்ற பின்னர் பொதுசாலையில் இயக்கப்பட வேண்டும். பள்ளிகள் திறந்த பின் பொதுசாலையில் தணிக்கை செய்யும் பணிகள் நடைபெறும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இலக்கியா, மாவட்ட தீயணைப்பு அலுவலர் குமார், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ப.ஜெயசங்கர், முதன்மை கல்வி அலுவலர் இரா,அண்ணாதுரை, துணை ஆட்சியர் (பயிற்சி) சங்கரநாராயணன், மோட்டார் வாகன ஆய்வாளர் வெ.ஆனந்த், வட்டாட்சியர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம், முட்டத்தூர் ஊராட்சியில் ”நாடு போற்றும் நான்காண்டு ”தொடரட்டும் இது பல்லாண்டு கழக சாதனை பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி, தலைமைக் கழக பேச்சாளர் கவிஞர்.மங்கலம் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, ஒன்றிய செயலாளர்கள் வேம்பி.ரவி, ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், ஒன்றிய குழு தலைவர் சங்கீதா அரசி, நகர செயலாளர் நயினா முகமது மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் பள்ளி வாகனங்கள் ஆய்வு!

# சரியாகப் பராமரிக்கப்படாத வாகனங்கள் - ஓட்டுநர்களுக்கு அபராதம்!

## மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுரை!

தருமபுரி, மே.11-

தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற பள்ளி வாகனங்கள் ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,

பள்ளி வாகனங்களை சரிவர பராமரிக்கப்படாத 2 பள்ளி வாகனங்களுக்கு ரூ.1000/- அபராதமும், ஓட்டுநர் உரிமம் இல்லாத மற்றும் அவசர கல வழிகளை சரிவர பராமரிக்காத பள்ளி வாகன ஓட்டுநனருக்கு ரூ.5000/- வரை அபராதமும், முதலுதவி பெட்டிகளில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்திய 10 பள்ளி வாகனங்களுக்கு ரூ. 100/- அபராதமும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விதிக்கப்பட்டது.

மேலும், பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி, பள்ளி வாகனங்களில் அரசின் அனைத்து விதிமுறைகளும் முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உரிய முறையில் ஆய்வு செய்திட வேண்டும் என வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற பள்ளி வாகனங்கள் ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் நேற்று (10.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி, பள்ளி வாகனங்களில் அரசின் அனைத்து விதிமுறைகளும் முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உரிய முறையில் ஆய்வு செய்திட வேண்டும் என வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரெ.சதீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பள்ளி வாகனங்களில் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பிற்காக விதிமுறைகளை வகுத்து, பல்வேறு அறிவுறுத்தல்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மோட்டார் வாகன சிறப்பு விதிகள் 2012, விதி 11- ன்படி ஒவ்வொரு வருடமும் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்ய மாவட்ட அளவிலான குழு (DISTRICT LEVEL - INTER DEPARTMENTAL COMMITTEE) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவர் வருவாய் கோட்ட அலுவலர் ஆவார். உறுப்பினர்களாக 1. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் 2. துணை காவல் கண்காணிப்பாளர் 3. முதன்மை கல்வி அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர் 4. மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1 ஆகியோர் உள்ளனர். இக்குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வாகனங்கள் அனைத்தையும் பொதுவான ஓர் இடத்தில் வாகனங்களின் தகுதி குறித்து கூட்டு ஆய்வு மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

2025 - 2026 ஆம் ஆண்டிற்கான, தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு பகுதி அலுவலகங்களை சார்ந்த மொத்தம் 104 தனியார் பள்ளிகளில் இயங்கக்கூடிய 751 பள்ளி வாகனஙகளுக்கான சிறப்பு ஆய்வு முகாம் இன்று தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன்படி, இந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் தருமபுரி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் பள்ளி வாகனங்களில் இருக்கை வசதிகள், வாகனத்தின் காப்பீடு காலம், தீயணைப்பு கருவி, முதலுதவி கருவிகள், வேகக்கட்டுபாட்டு கருவி, வாகனத்தின் முன்புறம், பின்புறம் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள், அவசர கால கதவுகள் மற்றும் ஜன்னல்கள், பேருந்தின் தளம், பள்ளி குழந்தைகளுக்கான இருக்கை வசதிகள், பள்ளி குழந்தைகள் புத்தகப்பை வைக்கும் பகுதி உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளி வாகனங்களை எப்.சி. பரிசோதனைக்காக கொண்டு வரும்போது வாகனத்தில் இருந்த பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடுகளை அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். குறைந்தது 3 மாதங்களுக்கு ஒருமுறை அவசர கால கதவுகள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்களின் செயல்பாடுகளை பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அதே போல், அவசர கால கதவுகள் திறக்கும் முறைகள் மற்றும் தீத்தடுப்பு சாதனங்களை செயல்படுத்தும் முறைகளை ஓட்டுநர்கள் அறிந்துகொள்வதுடன், வாகனத்தில் உடன் வரும் பணியாளர்களும் அந்த செயல்பாட்டு முறைகளை தெரிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.

மேலும், ஆய்விற்கு வராத பள்ளி வாகனங்கள் பொதுச்சாலையில் இயக்குவது கண்டறியப்பட்டால் வாகனம் இயக்க விடாமல் தடைசெய்வதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களையும் இம்மாத இறுதிக்குள் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் 72 பள்ளிகளின் 352 பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் குறைபாடுகளுடைய 11 வாகனங்களுக்கு தகுதிச் சான்று ரத்து செய்யப்பட்டது. மேலும், சிறு குறைபாடுகளுடைய 14 வாகனங்கள் கண்டறியப்பட்டு, அவ்வாகனங்களின் குறைகளை நிவர்த்தி செய்து ஒரு வார காலத்திற்குள் மீண்டும் ஆய்விற்கு உட்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சி.க.ஜெயதேவ்ராஜ், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரா. காயத்ரி, மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அ.க. தரணீதர், ஆர்.பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

